1983 பிப்ரவரி 2]

மூங்கில்பாடி கிராம ஆதிதிராவிடர்களுக்கு அரசு கட்டிக்கொடுத்த வீடுகள்

வினா எண். 120. திரு. என். பெருமாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதியைச் சேர்ந்த மூங்கில்பாடி கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு அரசு கட்டிக்கொடுத்த வீடுகள் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: ஆம்.

திரு. என். பெருமாள்: தலைவர் அவர்களே, என்னுடைய வரகூர் தொகுதியில் மூங்கில்பாடி என்ற இடத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு 25 வீடுகள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டது. அது மோசமடைந்து இன்றைக்கு பாழடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: வீடுகள் எந்தக் காலத்திலே கட்டித்தரப்பட்டது என்பது முக்கியமல்ல. அவர்களுக்கு அந்த வீடுகள் இலவசமாகக் கட்டிக்கொடுக்கப்பட்டன. எனவே அந்த வீடுகளில் பழுது ஏற்படுமானால் அவர்களே அதற்கான செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆணை இருக்கிறது. அந்த வகையில் வீடுகளைப் பயன்படுத்துகின்றவர்கள் பழுதுபார்ப்பதற்கான செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பெருமாள்: தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தாட்கோ மூலம் வீடுகளைக் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: வீடுகள் பழுதாகிவிடுகிற போது அதைச் சரிசெய்வதற்கு தாட்கோ மூலமாக ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்கிறார் என்று நினைக்கிறேன். ஏற்கெனவே நான் எடுத்துச் சொன்னதைப்போல் அரசு எந்தக் காலத்திலே வீடுகளைக் கட்டித் தந்திருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகத்தான் அவை கட்டித்தரப்பட்டன. எனவே அவற்றில் பழுது ஏற்பட்டால் அவர்களே அதற்கான செலவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: வீடுகட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை வீடுகட்டுவதற்கு செலவு செய்யாத காரணத்தினால் வங்கிகளிலே போடப்பட்டதாக நான அறிகிறேன், அது உண்மையா? வீடுகளைக் கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதை அமல்நடத்தாமல் இருப்பது உண்மையா? உடனடியாக அந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனுக்காக இப்படி வீடுகளை கட்டித் தருவதோடு, அவர்களுடைய பொருளாதாரத்தையும் உயர்த்தவேண்டும் என்பது தான் அரசினுடைய கொள்கை. அந்த வகையில் தாட்கோ மூலமாக கட்டப்பட்ட வீடுகள் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையில் வீடுகளை கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகையை அரசு உத்தரவிட்டு தனியாக தாட்கோ மூலமாக ரூரல் ஹவுசிங் ஸ்கீமை நாம் செயல்படுத்துவதைப் போல அதே அளவிற்கு வீடுகளை அமைத்து அதற்கு உண்டாகக்கூடிய மொத்தத் தொகையான ரூ. 4,000-ல் ரூ. 3,250-ஐ மான்யமாகவும் மீதியிருக்கிற ரூ.750ஐ பயன் பெறுபவர்கள் உழைப்புக்குரிய ஊதியமாகவும் கருதி ரூ 4000-ல் ஒரு வீடு என்ற அளவில் 201 சதுர அடியில் கட்டவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்தவகையில் ஏற்கெனவே இருக்கக்கூடிய இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் இதற்கு முன்பு நான் குறிப்பிட்டுச் சொன்ன திட்டத்திற்கு செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளைய பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அமல்படுத்தப்படுமா என்பது தான் கேள்வி வீடே கட்டவில்லை என்றால் பழுது எப்படி வரும்*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூங்கில்பாடி கிராமத்தில் கட்டிக் கொடுத்த வீடுகள் பழுதடைந்துள்ளது என்பதுதான் கேள்வி. நீங்கள் தனிக்கேள்வி போடுங்கள், உட்காருங்கள்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டப்பட்டு வீடுகள் பழுதடைந்து இருக்கிறபோது, அந்த மக்கள் அவற்றை புதுப்பித்துக்கொள்ள அரசு குறைந்தபட்ச கடனாக நிதியுதவி அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய வழக்கம் இதுவரையில் இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் கடனாக தருவதற்கு என்ற வகையிலே ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். அதை வேண்டுமானால் வருங்காலத்தில் அரசு பரிசீலனை செய்யலாம்.

* குறுகிய கால வினா எண் 1 திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் ஒன்றியத்திற்கு நொய்யல் ஆற்றுத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?